சரக்கு மற்றும் சேவைவரிக்கு தயாராகுங்கள் » சரக்கு மற்றும் சேவைவரி 1 ஜுலை, 2017 முதல் அமலாகிறது

ஜிஎஸ்டி 1 நாடு வரி சந்தை

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

# பல்வேறு துறைகளிலிருந்து பெறப்பட்ட சரக்கு மற்றும் சேவைவரி தொடர்பான வினாக்கள் ஆய்வு செய்யப்பட்டு ஒரு சிறு அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளாக தொகுக்கப்பட்டுள்ளன.

## இரண்டாம் பகுதி, 50 கேள்விகள் மற்றும் அதற்குரிய விடைகள் அடங்கியவை, கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## பகுதி - 2

| வ. எண் | வினா | விடை |
|---|---|---|
| | **ரிட்டர்ன்கள்** | |
| 1. | ஏதேனும் ஒரு சூழ்நிலையில் அட்வான்ஸ் திரும்பப் பெறப்படும் பட்சத்தில், அட்வான்ஸ் ரெசிப்ட்டின் மீது செலுத்திய வரி என்னவாகும்? | ரீபண்ட் செய்யப்பட்ட அட்வான்ஸ், வரி கணக்கு தாக்கலில் சரி செய்யப்படும். |
| 2. | பதிவு செய்த டீலர்கள், பதிவு செய்யாத டீலர்களின் விற்பனை விவரங்களை ஜிஎஸ்டியில் பதிவேற்றம் செய்ய முடியுமா? | பொதுவாக முடியாது. ஆனால், மாநிலங்களுக்கு இடையிலான சப்ளையில், இன்வாய்ஸ் மதிப்பு ரூ.2.50 லட்சத்துக்கு மேல் இருக்க வேண்டும். |
| 3. | வெவ்வேறு வரி விதிப்பு இருந்து, ஒரே HSN கோடு உள்ள மருந்து பொருள் சப்ளையை ரிட்டர்னில் ஒருங்கிணைப்பது எப்படி? | வரி வாரியாக விவரங்கள் சமர்ப்பிக்க வேண்டும். |
| | **சப்ளை** | |
| 4. | சிறிய மதிப்பிலான பரிவர்த்தனை கொண்ட அனைத்து ரிவர்ஸ் கட்டணங்களுக்கும் ஜிஎஸ்டி வரி செலுத்த வேண்டுமா? அல்லது ஏதாவது வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா? | பதிவு செய்யப்படாத நபரிடம் இருந்து நாளொன்றுக்கு ₹5000 பரிவர்த்தனைக்கு விலக்கு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலான தொகை பரிவர்த்தனை செய்யப்பட்டிருந்தால், மாதாந்திர மொத்த தொகையை வைத்து கணக்கிடப்படும். |
| 5. | எஃப்எம்சிஜி நிறுவனங்கள் நுகர்வோருக்கு இலவசமாக வழங்கும் பொருட்கள் எந்த வகையில் கணக்கில் கொள்ளப்படுகிறது? | சப்ளை செய்யும்போது பெறப்படும் மொத்த தொகை அடிப்படையில் மட்டும் வரி கணக்கிடப்படும். |
| 6. | பிற மாநிலத்திலுள்ள பதிவு செய்யாத சப்ளையருடன் பிஓஎஸ் மேற்கொள்ளப்பட்டால், அது, சிஜிஎஸ்டி சட்டப்பிரிவு 9 (4) ன் கீழ் எப்படி பொருந்தும்? | மாநிலங்களிடையே பொருட்கள் சப்ளை செய்பவர் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும். இதில் 9(4) சட்டப் பிரிவு பொருந்தாது. |
| 7. | பதிவு செய்யாத டீலரிடம் இருந்து பொருட்களை வாங்குபவர், ஆர்சிஎம் அடிப்படையில் ஜிஎஸ்டி செலுத்த வேண்டும். எனவே, இடைக்காலத்தில் வழங்கப்படும் உதவித்தொகை ஆர்சிஎம்–ன் கீழ் வருமா? | இடைக்கால உதவித்தொகை வழங்குவது முதலாளி – தொழிலாளி இடையிலான பரிவர்த்தனையாகும். இது ஜிஎஸ்டிக்கு பொருந்தாது. |
| 8. | பங்குதாரராக உள்ள நிறுவனங்கள், பங்குதாரருக்கு வருமான வரி சட்டப்படி வழங்கும் சம்பளம் ஜிஎஸ்டிக்கு பொருந்துமா? | சம்பளம் ஜிஎஸ்டிக்கு பொருந்தாது. |
| 9. | சிஜிஎஸ்டி சட்டம் 2017 பிரிவு 9 (4). பதிவு செய்யப்படாத ஸ்டேஷனரி கடையில் இருந்து ரூ.100 மதிப்பிலான ஸ்டேஷனரி பொருட்கள் வாங்கினால், நான் ஆர்சிஎம் அடிப்படையில் வரி செலுத்த வேண்டி வருமா? | பதிவு செய்யாத நபரிடம் இருந்து நாள் ஒன்றுக்கு ரூ.5000 மதிப்பிலான சப்ளை பெறுவதற்கு விலக்கு அளிப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. |
| 10. | எஃப்எம்சிஜி நிறுவனங்கள் நுகர்வோருக்கு இலவசமாக வழங்கும் பொருட்கள் எந்த வகையில் கணக்கில் கொள்ளப்படுகிறது? ஐடிசி அனுமதிக்கப்பட்டால் வரி செலுத்த வேண்டி வருமா? | எவ்வளவு சப்ளை செய்யப்படுகிறதோ அதற்கேற்ப வரி விதிக்கப்படும். ஐடிசியும் அதற்கேற்ப விதிக்கப்படும் |
| 11. | திரும்ப பெறப்படும் டிரம் போன்ற பேக்கிங் மெட்டீரியலில் அடைத்து அனுப்பப்படும் பொருட்களுக்கு ஜிஎஸ்டி விதிக்கப்படுமா? | சப்ளை மதிப்புக்கு மட்டும் ஜிஎஸ்டி விதிக்கப்படும். |
| 12. | ஸ்கிராப் பொருட்கள் ஜிஎஸ்டியில் எவ்வாறு கொள்ளப்படும்? | கழிவுப்பொருட்களானது வர்த்தக நிமித்தம் நிகழ்வில் அல்லது மேற்கொண்டு நிறைவேற்றமாக இருந்தால், அது வழங்கலாக கருதப்படும். |
| 13. | நான் ம.பி.யை சேர்ந்தவர். மகாராஷ்டிராவில் உள்ள நுகர்வோருக்கு சேவை அளிக்கிறேன். மகாராஷ்டிராவில் சேவை அளிப்பவர் மூலம் அவுட்சோர்சிங் முறையில் இதை செய்கிறேன். இதற்கு எவ்வளவு வரி செலுத்த வேண்டிவரும்? | பொதுவாக இது இரண்டு சப்ளையாக கணக்கிடப்படும். ம.பி.யில் இருந்து சப்ளை செய்பவர் மகாராஷ்டிராவில் உள்ளவரிடம் இருந்து ஐஜிஎஸ்டி பெறுகிறார். அதேபோல், மகாராஷ்டிராவில் சேவை அளிப்பவர், ம.பி.யில் உள்ள பயனாளியிடம் இருந்து ஐஜிஎஸ்டி பெறுகிறார். |
| 14. | சப்ளையர் விலாசம் ராஜஸ்தான் மாநிலமாகவும், கொள்முதல் செய்பவர் விலாசம் பஞ்சாப் மாநிலமாகவும் இருந்தால், ஐஜிஎஸ்டி பொருந்துமா அல்லது சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி பாயுமா? | சப்ளை செய்யப்படும் இடமும், சப்ளை செய்பவரின் இருப்பிடமும் ஒரே மாநிலத்தில் அமைந்தால், அது உள்–மாநில சப்ளையாக கருதப்பட்டு சிஜிஎஸ்டி/எஸ்ஜிஎஸ்டி பொருந்தும். |
| 15. | சிஜிஎஸ்டி எஸ்ஜிஎஸ்டி – ஐஜிஎஸ்டியில் ரொக்க வைப்புத்தொகை ஏன் பிரிக்கப்படுகிறது? | மூன்று வரிகளும் வெவ்வேறு மூன்று வரிப்பட்டியலில் இடம் பெறுவதால், தனித்தனியே கணக்கு வைக்கப்படுகிறது. |
| 16. | ‘ஒன்றுமில்லா நிலை’ மற்றும் ’0% வரிக்கு உட்பட்டது’ ஆகிய இரண்டிற்கும் வித்தியாசம் என்ன? மற்றும் அவற்றிற்கு சரக்கு மற்றும் சேவையில் விலக்கு அளிக்கப்படுகிறதா? குறிப்பாக ஐடிசி தொடர்புடைய வர்த்தகத்தில் அவ்வாறு விலக்கு உள்ளதா? | ஒன்றுமில்லா நிலை (0% வரிக்கு உட்பட்டது) போன்ற சப்ளைகளுக்கு வரி விலக்கு பொருந்தும். வரிக்கு பொருந்தாத சப்ளைகள் மற்றும் ஐடிசி இல்லாமல் கிடைக்கும் சப்ளைக்கு இந்த விலக்கு பொருந்தும். |
| 17. | ஜிஎஸ்டி அமலானபின், மகாராஷ்டிரா மாநிலத்தில் புரொபஷனல் வரி ஒழிக்கப்படுமா? | புரொபஷனல் வரி என்பது தொழில் சார்ந்ததாக இருந்தாலும் அதே சமயம், சரக்கு மற்றும் சேவை வரி சப்ளை கீழ் வருவதல்ல. ஜிஎஸ்டியில் புரொபஷனல் வரி கணக்கில் கொள்ளப்படவில்லை. |
| 18. | பஸ் வசதி, உணவு கூப்பன், வீட்டில் தொலைபேசி வசதி, அலுவலக மற்றும் சொந்த உபயோகத்திற்கு வாகனம், சீருடை, ஷூ போன்றவைகளை நிறுவன உரிமையாளர் வழங்கினாலும் ஜிஎஸ்டி உண்டா? | வழங்கப்படும் பொருட்களை பரிசாக அறிவித்தால் ஜிஎஸ்டி விதிக்கப்படாது. அதேவேளையில், ஒரு நிதியாண்டில் பரிசு பொருட்களின் மதிப்பு ₹50000க்கு மிகாமல் இருக்க வேண்டும். |
| 19. | பிரிவு 8 ன் கீழ், கலப்பு வழங்கலும் மற்றும் அதன் விளக்கமும் வேறுபடுகிறது. அதன் விளைவுகளை விளக்கிக் கூறவும். | கலப்பு வழங்கல் என்றால் என்ன என்று பிரிவு 2(30) விவரிக்கிறது. அதே சமயம், பிரதான சப்ளைக்கு என்ன வரி விதிக்கப்படுகிறதோ அதுதான் கலப்பு வழங்கலுக்கும் பொருந்தும் என பிரிவு 8ல் கூறப்படுகிறது. |
| 20. | ஸ்லம்ப் விற்பனைக்கு ஜிஎஸ்டி உட்படுமா? ஆம் எனில், எந்த பிரிவில் விதிக்கப்படுகிறது? | பொது சப்ளை என்னவோ அதே வரையறை இதற்கும் பொருந்தும். |
| 21. | பங்கு நிறுவனத்தில், வருமான வரி சட்டத்துக்கு உட்பட்டு பங்குதாரர்களுக்கு சம்பளம் வழங்கினாலும் ஜிஎஸ்டி பொருந்துமா? பங்குதாரர்கள் அந்த நிறுவனத்தில் ஊழியர்களாக இல்லை என கணக்கிட்டு பதிலளிக்கவும். | சம்பளத்திற்கு ஜிஎஸ்டி விதிக்கப்படாது. |
| | **மாறும் முறை** | |
| 22. | மாற்றுமுறையில் நான் கிரெடிட்டை எப்படி பெறமுடியும்? | மாற்றுமுறை விதிகள் அடிப்படையில் அதற்கென உள்ள படிவங்களை பூர்த்தி செய்து மாற்றுமுறை வரவை நீங்கள் அனுபவிக்கலாம். |
| 23. | ஏரியாவை பொறுத்த மட்டிலும், 50/2003ன்படி, உத்தரகாண்ட் மற்றும் இமாச்சலப் பிரதேச மாநில பகுதிகளில் அளிக்கப்படும் விலக்கு பற்றி தெளிவாக விளக்கவும். | பகுதி வாரியான விலக்கு ஜிஎஸ்டியில் மேலும் தொடராது. ஏற்கனவே கூறப்பட்டுள்ள பணம் திரும்பப் பெறும் முறைகள்படி, அந்த சேவை கணக்கிடப்படும். |
| 24. | சுங்க வரிக்கு உட்பட்ட பொருட்கள் தயாரிக்கிறோம். உற்பத்தி பிரிவுக்கு 50/2003ன்படி விலக்கு சலுகைகள் அளிக்கப்பட்டு உள்ளது. எங்களது பொருட்களை கொள்முதல் செய்யும் டீலர்களின் நிலை என்ன? | ஜிஎஸ்டிக்கு உட்பட்டு பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு இருந்தால், டீலர்களின் கணக்கில் ஜிஎஸ்டியில் 40% / 60% பற்று வரவு வைக்கப்படும். பொருட்கள் முத்திரை பதிக்கப்பட்டும், மதிப்பு ₹25000க்கு அதிகமாக இருந்தாலும் சிடிடி முறையில் முழு வரவை அனுபவிக்கலாம். |
| 25. | ₹1.5 கோடிக்கும் குறைவாக விற்றுமுதல் வியாபாரம் செய்யும் வியாபாரி, சுங்கவரித் துறையில் பதிவு செய்யாத ஒரு உற்பத்தியாளரிடம் இருந்து கொள்முதல் செய்கிறார். அப்படியானால், வியாபாரியால் 40% சரக்கு இருப்பை ஐடிசியில் கணக்கிடலாமா? | ஆம். விவரிக்கப்பட்டு உள்ள மற்ற நிபந்தனைகளை திருப்தி செய்யும் பட்சத்தில், வியாபாரி கடன் பற்றை அனுபவிக்க முடியும். |
| 26. | நான் ஒரு வணிகர். என்னிடம் கலால் செலுத்திய கொள்முதல் பட்டியல் (Invoice) உள்ளது. நான் 1 ஜூலை, 2017 இருப்புநிலை சரக்கு மீது முழு கலால் வரி வரவு கோர முடியுமா? | நீங்கள் கலால் வரி செலுத்தியிருக்கும் ஆவணம் வைத்திருப்பதால் மத்திய சரக்கு மற்றும் சேவைவரி சட்டத்தின் பிரிவு 140(3) கீழ் நிபந்தனைகளுக்குட்பட்டு கையிருப்பு சரக்கின் மீது இவ்வித வரியின் முழு மாறும்கால வரவு கிடைக்கப்பெறும். |
| 27. | ஒரு வணிகர் தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து & கலால் வரி காட்டும் ஆவணங்களை வைத்திருந்தால், அவர் முழு கலால் வரவு அல்லது CGST–ன் 40% பெறுவாரா? | நீங்கள் கலால் வரி செலுத்தியிருக்கும் ஆவணம் வைத்திருப்பதால் மத்திய CGSTசட்டத்தின் பிரிவு 140(3) கீழ் நிபந்தனைகளுக்குட்பட்டு கையிருப்பு சரக்கின் மீது இவ்வித வரியின் முழு மாறும்கால வரவு கிடைக்கப்பெறும். |
| 28. | ஒரு FSD (முதல் நிலை விற்பனையாளர்) தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து மேலும் மதிப்புடன் கூடிய கலால் வரி ஆவணம் பெற்றிருப்பதோடு அதில் கலால் வரி தனியாக தெரிவிக்கப்படாதிருந்தால் அவர் முழு வரவு பெறுவாரா? | நீங்கள் கலால் வரி செலுத்தியிருக்கும் ஆவணம் வைத்திருப்பதால் மத்திய சரக்கு மற்றும் சேவைவரி சட்டத்தின் பிரிவு 140(3) கீழ் நிபந்தனைகளுக்குட்பட்டு கையிருப்பு சரக்கின் மீது இவ்வித வரியின் முழு மாறும்கால வரவு கிடைக்கப்பெறும். |
| 29. | நேரடியாக தயாரிப்பாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து மேலும் கலால் வரி தனியாக பட்டியலில் தெரிவிக்கப்பட்டதான வணிகர்களுக்கும் முழு கலால் வரி வரவு கிடைக்கப்பெறுமா? | நீங்கள் கலால் வரி செலுத்தியிருக்கும் ஆவணம் வைத்திருப்பதால் மத்திய சரக்கு மற்றும் சேவைவரி சட்டத்தின் பிரிவு 140(3) கீழ் நிபந்தனைகளுக்குட்பட்டு கையிருப்பு சரக்கின் மீது இவ்வித வரியின் முழு மாறும்கால வரவு கிடைக்கப்பெறும். |
| 30. | ஜூன் 17 VAT ரிட்டனில், தொகை எதுவும் முன்னெடுத்து எழுதப்படாது & ₹50 லட்சம் இருப்பு வைத்திருந்தால். நாங்கள் அந்த இருப்புக்கு வரவு எடுத்துக் கொள்ளலாமா அல்லது முடியாதா? | ஜூன் 17–க்கான மதிப்புக்கூட்டு வரி ரிட்டனிலிருந்து உள்ளீட்டு வரி வரவின் இருப்புநிலை பாக்கியை வழங்குனர் முன்னெடுத்து எழுதிக் கொள்ள தகுதியானவர். |
| 31. | 1 ஜூலை அன்று ஏற்கனவே செலுத்திய மதிப்புகூட்டு வரி கொண்டிருக்கும் இருப்புநிலை சரக்கின் தாக்கம் என்னவாக இருக்கும்? | கடைசி மதிப்புக்கூட்டு வரி ரிட்டனிலிருந்து இவ்வித இருப்பு மீதான உள்ளீட்டு வரி வரவை முன்னெடுத்து எழுதிக் கொள்ள வழங்குனர் தகுதியானவர். |
| 32. | ஜூன் 17–ல் மதிப்புகூட்டுவரி ரிட்டனில் வாபஸ்தொகை கோரப்பட்டிருந்தால் & சரக்கு மற்றும் சேவைவரியில் நிலுவை வரவு இல்லையெனில், படிவம் C சமர்ப்பிப்பதன் நிலைப்பாடு என்ன? | நடப்பு சட்டத்தின் கீழ் கோரும் வாபஸ்தொகை நடப்பு சட்டங்களின் விதிமுறைகளின்படி கையாளப்படும். மாறும் விதிகளின் விதி 1(1) விதிமுறைகளின்படி படிவம் C சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| 33. | சில சேவை 28.06.2017 அன்று வழங்கப்பட்டு ஆனால் பட்டியல் (Invoice) 05.07.2017 அன்று தயாரிக்கப்படுமானால். நாங்கள் சேவைவரி வசூலிக்க வேண்டுமா அல்லது GST–யா? | வரிவிதிப்புநியமன தேதிக்கு பிறகு மேற்கொள்ளப்பட்டால், இவ்வித வழங்கலின் மீது சரக்கு மற்றும் சேவைவரி விதிக்கப்பட வேண்டும். |
| 34. | நாங்கள் மாறும் காலத்தில் மேலும் GSTக்கு பிறகு பெற்ற முதலீட்டு சரக்குகள் மீதான வரவுக்கு தகுதி பெறுவோமா? | இவ்வித வரவுக்கான விதிவகை எதுவும் சரக்கு மற்றும் சேவைவரி சட்டத்தில் இல்லை. |
| 35. | மாறும் தேதியிலான நிலுவை மதிப்புகூட்டுவரி பாக்கி குறித்த நிலை என்ன? | ஜூன் 2017–க்கான ரிட்டனில் உள்ள பாக்கி மதிப்புக்கூட்டு வரி வரவானது SGST வரவாக மாற்றிக்கொள்ளப்பட வேண்டும். |
| 36. | படிவம் H எதிரான நிகர்நிலை ஏற்றுமதி பற்றிய விவரம் என்ன? | சரக்கு மற்றும் சேவைவரியில் படிவம் H இருக்காது. |
| 37. | 30 ஜூன் 2017 தேதிய இருப்புநிலை சரக்குகள் மீதான வரி வித்தியாசத்தை யார் ஏற்க வேண்டும்? தயாரிப்பாளரா/ விற்பனையாளரா அல்லது அரசா? | மதிப்புக்கூட்டுவரி ரிட்டனில் உள்ள இருப்புநிலை உள்ளீட்டு வரி வரவானது சரக்கு மற்றும் சேவைவரியில் முன்னெடுத்து எழுதிக் கொள்ள அனுமதிக்கப்படும். |
| 38. | வெளி மாநிலம், கலால், மத்திய விற்பனை வரி மற்றும் நுழைவு வரி செலுத்தியதன் மூலம் பட்டியல் செய்யப்பட்ட (billed) உதிரிபாகங்களுக்கான கையிருப்பு சரக்கு மீதான உள்ளீட்டு வரவு நாங்கள் பெறுவது எப்படி? | வரி செலுத்திய ஆவணங்கள் உள்ள அனைத்து உள்ளீடுகளுக்கும் சம்பந்தப்பட்ட CGST/SGST வரவு கிடைக்கப்பெறும். ஆனால் மத்திய விற்பனைவரியின் வரவு கிடைக்கப்பெறாது. |
| 39. | விற்றுமுதல் 1.5 கோடிக்கு குறைவாக இருப்பதால் கலால் துறையில் பதிவுபெறாத தயாரிப்பாளரிடமிருந்து ஒரு வணிகர் கொள்முதல் செய்திருக்கும் நிலையில் வணிகர்கள் 40% வரை இருப்பு மீதான உள்ளீட்டு வரி வரவு பெறலாமா? | மாறும் விதிகளின் விதி 1(4) உடன் பிரிவு 140(3) நிபந்தனைகளை நிறைவு செய்வதற்குட்பட்டு கையிருப்பு சரக்கின் மீது மீள் வரவு கிடைக்கப்பெறும். |
| 40. | மாறும் காலத்தில் மேலும் சரக்கு மற்றும் சேவைவரிக்கு பின்பு பெறப்பட்ட முதலீட்டு சரக்குகள் மீது செலுத்திய வரி வரவுக்கு நாங்கள் தகுதி பெறுவோமா? | சரக்கு மற்றும் சேவைவரியில் இவ்வித விதிவகைகள் இல்லை. |
| 41. | தூய்மை இந்தியா வரி அல்லது விவசாயி வளர்ச்சி வரியின் உள்ளீட்டு வரி வரவானது GST கீழ் முன்னெடுத்து எழுத முடியுமா? | முடியாது. |
| 42. | ஒரு மெட்ரிக் டன்னுக்கு ₹400 விகிதத்தில் இறக்குமதி நிலக்கரி மீதான தூய எரிசக்தி வரியானது சரக்கு மற்றும் சேவைவரியிலும் தொடருமா? | இல்லை. தூய எரிசக்தி வரி நீக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும், நிலக்கரியானது டன்னுக்கு ₹400/– விகிதத்தில் இழப்பீடு வரிக்கு உட்பட்டதாக இருக்கும். |
| 43. | 1 மார்ச் 2015 தேதிக்கு முந்தைய கல்வி வரி & இடைநிலை மற்றும் உயர்நிலை கல்வி வரியின் இருப்புப் பாக்கி சரக்கு மற்றும் சேவைவரியில் எடுத்துக் கொள்ளப்படுமா? | முடியாது. மத்திய சரக்கு மற்றும் சேவைவரி சட்டத்தின் பிரிவு 140 கீழ் “தகுதி தீர்வைகள் மற்றும் வரிகள்” வரையறைக்குள் இது வராதிருப்பதால் சரக்கு மற்றும் சேவைவரியில் இதை முன்னெடுத்து எழுதிக் கொள்ள முடியாது. |
| 44. | ஒரு ஆண்டு வரம்பில் இருப்புநிலை சரக்கு மீதான 40% பயன் பொருந்துமா அல்லது இல்லையா என்பதை நீங்கள் தெளிவுபடுத்த முடியுமா? | ஒரு ஆண்டு காலத்துக்குள் கொள்முதல் செய்துள்ள அனைத்து இருப்புக்கும் மீள் வரவு கிடைக்கப்பெறும். |
| 45. | மாறும்கால வரவு எந்த காலவரம்பு வரை கிடைக்கப்பெறும்? எனது உள்ளீட்டு இருப்பினை அறிவிக்கை வேண்டியது அவசியமா? | மாறும் வரவு படிவங்கள் உறுதிமொழி அளிக்கும் காலம் நியமன தேதியிலிருந்து மூன்று மாதங்களாகும். மேலும் விவரங்களுக்கு மாறும் விதிகளை படிக்கவும். |
| | **யூனியன் பிரதேசம் சரக்கு மற்றும் சேவைவரி** | |
| 46. | அந்தமான் & நிகோபார் தீவுகளில் முன்பு மதிப்புக்கூட்டு வரி கிடையாது தற்போது சரக்கு மற்றும் சேவைவரி உண்டா? | ஆம். அந்தமான் & நிகோபார் தீவுகளுக்குள்ளான வழங்கல்களுக்கு, CGST மற்றும் UTGST விதிக்கப்பட வேண்டும். |
| | **மற்றவை** | |
| 47. | கடல்வாணிப விற்பனையில் IGST இருமுறை விதிக்கப்படுமா? முதலில் கடல்வாணிப விற்பனை மற்றும் இரண்டாவது சுங்கத் தீர்வை. IGST செலுத்திய ஒருவர் உள்ளீட்டு வரி வரவாக பெற முடியுமா? | IGST இறக்குமதிகள் மீது ஒருமுறை மட்டும் விதிக்கப்படும். |
| 48. | விவசாய மண்டி கட்டணம் (உத்திரபிரதேசத்தில் விதிக்கப்பட்டது) சரக்கு மற்றும் சேவைவரியில் தள்ளுபடி செய்யப்படுமா? | GST இவ்வித கட்டணத்தை கணக்கில் கொள்ளவில்லை எனவே சரக்கு மற்றும் சேவைவரி அதை பாதிக்காது. |
| 49. | 1 ஜூலை, 2017 முதல் இ–வே பில் பொருந்துமா? | இ–வே பில் நடைமுறைகள் இறுதி செய்யப்படும் வரை, மாநிலங்களில் இ–வே பில்லுக்கான நடப்பு முறை தொடரும். |
| 50. | லாபம்குவிப்பு தடுப்பு சட்டத்துக்கான அஸ்தமன விதி உண்டா? | ஆம், லாபம்குவிப்பு தடுப்பு சட்டத்துக்கான அஸ்தமன விதி இரண்டு ஆண்டுகளுக்கானது. |

பொறுப்புதுறப்பு: மேலே கொடுக்கப்பட்ட விடைகள் அறிவூட்டல் மற்றும் வழிகாட்டல் காரணத்துக்கானது மட்டும் மேலும் எந்தவித சட்டப்பூர்வ மதிப்பும் அற்றது.

மேலும் விவரங்களுக்கு http://www.cbec.gov.in/resources//htdocs-cbec/gst/tweet-faq.pdf காணவும்

davp 15502/13/0068/1718

வரிகள் செலுத்தப்படுகையில், ஒரு நாடு நிர்மாணிக்கப்படுகிறது

ஜிஎஸ்டி விசாரணைக்கு @askGST_GoI டுவிட் செய்யவும்

மத்திய கலால் மற்றும் சுங்கம் வாரியம் &
மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் வணிகவரித் துறைகள்
www.cbec.gov.in